

# முன்னாள் மாணவர்கள் ஒன்றிணைந்து அரசு பள்ளிகளை காப்போம்

## ‘விழுதுகள்' நிகழ்ச்சியில் மு.க.ஸ்டாலின் அழைப்பு

**சென்னை, ஜன.10**

**‘முன்னாள் மாணவர்கள் ஒன்றிணைந்து அரசு பள்ளிகளை காப்போம்' என்று விழுதுகள் நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் வாழ்த்துரையை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வாசித்தார்.**

முன்னாள் அரசு பள்ளி மாணவர்களை ஒன்றிணைக்கும் முன்னெடுப்பான ‘விழுதுகள்' நிகழ்ச்சி சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இதில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, செயலாளர் ஜெ.குமரகுருபரன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் வாழ்த்துரையை, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வாசித்தார். அதன் விவரம் வருமாறு:

தமிழ்நாடு முன்னேறிய மாநிலமாக திகழ்வதற்கு, மிக முக்கிய காரணம் கல்விதான். அத்தகைய கல்வியை அனைவருக்குமானதாக மாற்றிய பெருமை, நம் அரசு பள்ளிகளையே சாரும். தொடக்கக் காலகட்டம் முதல், இன்றைய நாள் வரை, அரசு பள்ளிகளே அனைவருக்குமான கல்வியை கொடுத்து கொண்டிருக்கிறது.

இத்தகைய சிறப்புக்குரிய அரசு பள்ளிகளில் படித்து, இன்றைக்கு வாழ்க்கையிலும், பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கி, பல உயரங்களை எட்டியிருக்கிற, உங்கள் எல்லோரையும் மனதார வாழ்த்துகிறேன். நாம் படித்த பள்ளிக்காக, நாம் எல்லோரும் திரும்ப, ஓரிடத்தில் ஒன்று கூடியிருக்கிறோம் என்பது மிகவும் முக்கியமான தருணம். இப்போது முதல், நாம் படித்த அந்த அரசு பள்ளிகளில் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு ஊக்கமாகவும், அந்தந்த பள்ளியின் ஆசிரியர்களுக்கு உறுதுணையாகவும் இருப்பதோடு, அந்த பள்ளிக்கும், ஊருக்கும் இணைப்பு பாலமாகவும் நாம் இருக்க வேண்டும்.

‘நம் பள்ளி, நம் பெருமை' என்கிற முழக்கத்திற்கு முன்னாள் மாணவர்களாகிய நீங்கள்தான் சொந்தக்காரர்கள். நீங்கள்தான் ‘விழுதுகள்'. விழுதுகளாகிய நீங்கள் எல்லாம், ஒன்று சேர்ந்து ‘நம் பள்ளி, நம் பெருமை' என்ற கூற்றை நிலைநிறுத்த வேண்டும். அதற்கு நாம் அனைவரும் பள்ளி மேலாண்மைக்குழுவோடு இணைந்து நம் பள்ளியின் மேம்பாட்டிற்காகச் செயலாற்றவேண்டும். விழுதுகளாகிய ஒவ்வொருவரும் நம்முடைய அரசு பள்ளிகளை பேணிக் காப்பதையும், அவற்றை மேம்படுத்துவதையும் நமக்கான பொறுப்பாக எடுப்போம், அடுத்த தலைமுறையினருக்கான நம்பிக்கையாகவும் வழிகாட்டியாகவும் இருப்போம்.

இவ்வாறு அந்த வாழ்த்து செய்தியில் கூறப்பட்டு இருந்தது.

அதனைத் தொடர்ந்து நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

நம்முடைய 2வது பெற்றோர், வீடு எவை என்றால், அது நாம் படித்த பள்ளிக்கூடம் தான். சிறுவயதில் பெற்றோர் எல்லாவற்றையும் எப்படி செய்து கொடுத்தார்களோ, அதேபோல் பள்ளிக்கூடமும் தேவையான கல்வி, அறிவு எல்லாவற்றையும் கொடுத்து ஆளாக்கியது. நிறைய இடங்களில் முன்னாள் மாணவர்கள் இணைந்து, பள்ளிக்கு புதிய கட்டிடத்தை கட்டிக்கொடுத்து இருக்கிறார்கள் என்ற செய்தியை பார்க்கிறோம். அந்த எண்ணிக்கை அதிகமாக வேண்டும்.

அரசு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு தி.மு.க. அரசு ஏராளமான திட்டங்களை செய்கிறது. பள்ளிகள் நம்மை எப்படி கைவிடவில்லையோ? அதேபோல நாமும் கைவிட்டு விடக்கூடாது. அரசு பள்ளியில் படித்த முன்னாள் மாணவர்கள் ஓரணியில் இணைந்து வாருங்கள். விழுதுகள் மூலம் பள்ளிகளை வலிமையாக்குவோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதனிடையே பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தனது எக்ஸ் சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

சமூகநீதி கொள்கையை எப்போதும் அழுத்தமாக வலியுறுத்தும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இனிவரும் காலங்களில் சமூகநீதி பாடல் அரசு பள்ளிகளின் காலை வணக்க நிகழ்வில் பாடப்படும் என தெரிவித்து கொள்கிறோம். இதற்கான செயல்முறைகள் குறித்த சுற்றறிக்கை விரைவில் அனைத்து பள்ளிகளுக்கும் அனுப்பப்படும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# உலக முதலீட்டாளர்கள் மாநாடு மிகப்பெரிய பாய்ச்சல்: மு.க.ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, ஜன.10–

உலக முதலீட்டாளர்கள் மாநாடு மிகப்பெரிய பாய்ச்சல் என்றும், பரவலான வளர்ச்சி பயணத்தில் முக்கிய மைல்கல் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பெருமிதத்துடன் கூறியுள்ளார்.

சென்னையில் கடந்த 7 மற்றும் 8ந்தேதிகளில், உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்பட்டது. மொத்தம் 631 தொழில் நிறுவனங்கள் மூலம் ரூ.6 லட்சத்து 64 ஆயிரத்து 180 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. இதுதொடர்பாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை இந்தியாவே வியக்கும் வகையில் வெற்றிகரமாக நடத்திக்காட்டிய தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, அரசு உயர் அலுவலர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி.

இருநாள் மாநாடு 20 ஆயிரம் தொழில்துறைப் பிரதிநிதிகள் பங்கேற்புடனும், 39 லட்சம் மாணவர்கள் பார்வையிடவும் பல புதுமைகளோடு தமிழ்ப் பண்பாட்டின் பெருமிதங்களைப் பறைசாற்றி நடந்தேறியுள்ளது.

நமது திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு இளைஞர்களும் மகளிரும் உயரும் திட்டங்களையும், செயல்களையும் செயல்படுத்தி வருகிறோம். அதில் மிகப்பெரிய பாய்ச்சல்தான், இந்த தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு.

‘எல்லோருக்கும் எல்லாம்', ‘எல்லா மாவட்டங்களுக்குமான பரவலான வளர்ச்சி' என்ற நமது பயணத்தில் இது முக்கிய மைல்கல்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 3 பல்கலைக்கழகங்களுக்கு அமைக்கப்பட்ட தேடுதல்குழு அறிவிப்பு வாபஸ்: கவர்னர் மாளிகை தகவல்

**சென்னை, ஜன.10–**

**பல்கலைக்கழக மானியக் குழு பிரதிநிதியுடன் 3 பல்கலைக் கழகங்களுக்கு அமைக்கப்பட்ட தேடுதல் குழுவை வாபஸ் பெறுவதாக கவர்னர் மாளிகை அறிவித்துள்ளது.**

இது தொடர்பாக தமிழக கவர்னர் மாளிகை தரப்பில் வெளியிட்டுள்ள அறிவிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழக பல்கலைக்கழகங்களின் வேந்தர் என்ற அடிப்படையில் கவர்னர் ஆர்.என்.ரவி, பாரதியார், சென்னை மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் துணைவேந்தர்களை தேர்வு செய்வதற்காக 3 பேர் அடங்கிய தேடுதல் குழுவை அமைத்து, கடந்த ஆண்டு செப்டம்பர் 6–ந்தேதி அறிவிப்பாணைகளை வெளியிட்டு இருந்தார்.

இதேபோல தமிழக அரசும் இந்த 3 பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களை தேர்வு செய்வதற்காக தனி தேடுதல் குழுவை அமைத்து, 3 அறிவிப்பாணைகளை வெளியிட்டு இருந்தது. ஆனால், இந்த அறிவிப்பாணைகள் பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) விதிகளுக்கு உட்பட்டு அமைந்திருக்கவில்லை.

புதுச்சேரி தொழில்நுட்பப் பல்கலைக்கழக துணைவேந்தர் நியமனத்துக்கான தேடுதல் குழு, யுஜிசி விதிகளுக்கு உட்பட்டு அமைய வில்லை என்பதால், அந்த நியமனம் செல்லாது என சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மேலும், பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட தேடுதல் குழு மூலமாக துணைவேந்தரை தேர்வு செய்திருப்பது சட்ட ரீதியாக ஏற்புடையதல்ல என்று தெரிவித்து, புதிய தேடுதல் குழுவில் யுஜிசி பிரதிநிதி இடம்பெறும் வகையில் சட்டத்திருத்தத்தை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளது.

எனவே, தமிழக அரசும் அரசியலமைப்பு சட்டம் மற்றும் உச்சநீதிமன்ற, உயர் நீதிமன்றத் தீர்ப்புகளின் அடிப்படையில், 3 பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்களை தேர்வு செய்வதற்கான தேடுதல் குழு தொடர்பான முந்தைய அறிவிப்புகளை திரும்பப்பெற்று, யுஜிசி விதிகளின்படி புதிதாக தேடுதல் குழுவை அமைத்து, பல்கலைக்கழகங்களின் வேந்தர் என்ற முறையில் கவர்னருக்கு பரிந்துரை செய்யும் என்று நம்புகிறேன்.

அதேபோல, 3 பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர்கள் நியமனத்துக்காக கவர்னர் சார்பில் அமைக்கப்பட்ட தேடுதல்குழு தொடர்பான 3 அறிவிப்பாணைகளும் திரும்பப் பெறப்படுகின்றன. தமிழக அரசும் தனது முந்தைய அறிவிப்பாணைகளை திரும்பப் பெற்றுக்கொண்டு, லட்சக்கணக்கான மாணவர்களின் உயர்கல்வி மற்றும் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு, யுஜிசி விதிகளுக்கு உட்பட்டு புதிய தேடுதல் குழுவை விரைவில் அமைக்கும் என்று நம்புகிறேன். இவ்வாறு கவர்னர் தெரிவித்துள்ளார்.

## பழைய பொருட்கள் எரிப்பதை தவிர்த்து, அதனை தூய்மைப் பணியாளர்களிடம் வழங்குங்கள்

# புகையில்லா போகி விழிப்புணர்வு பேரணி: மேயர் பிரியா தொடங்கி வைத்தார்

**சென்னை, ஜன. 10–**

**சென்னை மாநகராட்சியின் சார்பில் போகிப் பண்டிகையை முன்னிட்டு, புகையில்லா போகி குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் தியாகராய நகர் சாரதா வித்யாலயா மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவியர்கள் பங்கேற்ற புகையில்லா போகி விழிப்புணர்வுப் பேரணியினை மேயர் ஆர்.பிரியா நேற்று கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.**




இந்நிகழ்ச்சியில் மேயர் பேசியதாவது:– பள்ளிப்பருவம் என்பதே வாழ்க்கையின் மிகவும் முக்கியமான பருவம். இதில் வாழ்க்கையை மகிழ்ச்சியோடு கொண்டாடு வதோடு மட்டு மில்லாமல், படிப்பில் அதிக கவனம் செலுத்தி சிறப்பாக படிக்க வேண்டும். பெண்களுக்கு படிப்பு மிகவும் முக்கியமானதாகும். மாணவர்கள் தங்களுக்கென்று ஒரு இலக்கை வைத்து அதனைத் தொடர்ந்து செயல்படுத்தும் வகையில் முன்னேறிட வேண்டும்.

முதலமைச்சர் பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். நீங்கள் அனைவரும் தொடர்ந்து படிப்பதற்கு அரசு அனைத்து விதத்திலும் உறுதுணையாக இருக்கும்.

போகிப் பண்டிகை என்பது நமது வீட்டில் உள்ள பழைய பொருட்களை எரிக்கவேண்டும் என்பதையும் தாண்டி, நமது மனதில் உள்ள வன்மங்கள், கோபங்கள் மற்றும் பகை போன்ற தீய எண்ணங்களை அகற்றும் வகையில் இருக்கவேண்டும். சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தும் வகையில் ரப்பர், டயர், பிளாஸ்டிக் பொருட்கள் உள்ளிட்ட பழைய பொருட்களை எரிப்பதனைத் தவிர்த்து, தங்களது இல்லத்திற்கு குப்பை சேகரிக்க வரும் தூய்மைப் பணியாளர்களிடம் வழங்கிட வேண்டும். பெற்றோர்கள் மற்றும் அருகில் உள்ளவர்களுக்கு இதுகுறித்து எடுத்துக் கூறி விழிப்புணர்வினை ஏற்படுத்திட வேண்டும்.

மாணவர்களாகிய நீங்களும், உங்கள் குடும்பத்தினரும் இதனைக் கடைப்பிடிக்கும் பொழுது உங்களைப் பார்க்கும் அனைவரும் இதனைப் பின்பற்று வார்கள். மாற்றம் என்ற ஒன்று நம்மிடம் இருந்து தான் தொடங்க வேண்டும். அனைவருக்கும் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்து வது நமது கடமையாகும் என்றார்.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி, ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், நிலைக்குழுத் தலைவர் கோ.சாந்தகுமாரி, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜெ.பிரவீன் குமார், நியமனக் குழு உறுப்பினர் ராஜா அன்பழகன், மாமன்ற உறுப்பினர் ஏழுமலை, சுகாதார கல்வி அலுவலர் டி.ஜி.சீனிவாசன் மற்றும் எக்ஸ்நோரா நிர்வாகி ஸ்ரீதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


**homefirst** We'll take you home

**Home First Finance Company India Limited**
CIN: L65990MH2010PLC240703,
Website: homefirstindia.com Phone No.: 180030008425 Email ID: loanfirst@homefirstindia.com

**பிரிவு 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரராகிய நீங்கள் அட்டவணையில் குறிப்பிடப்படப்பட்டுள்ள சொத்தை அடமானம் வைத்ததன் மூலம் கடனைப் பெற்றுள்ளீர்கள். மேலும் கடன் ஒப்பந்தத்திற்காக கடன்தாரர்/இணை கடன்தாரர் என நீங்கள் கீழே குறிப்பிட்டுள்ளீர்கள். நீங்கள் வாங்கிய கடன் தொகையை திரும்ப செலுத்த தவறியதன் விளைவாக, 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் (சுருக்கமாக SARFAESI சட்டம்) உங்கள் கடன் கணக்கு 03/01/2024 அன்று செயல்படாத சொத்து என வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட் ஆகிய நாங்கள், நீங்கள் வழங்கிய முகவரிக்கு SARFAESI சட்டத்தின் பிரிவு 13(13) மற்றும் பிரிவு 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டுள்ளோம். 03/01/2024 அன்று மேற்சொன்ன அறிவிப்புகள் வெளியிடப்பட்டது மற்றும் உங்களுக்கு அளிக்கப்பட்ட பல்வேறு கடன்களை திரும்ப செலுத்துவதிலிருந்து நீங்கள் தவறிவிட்டீர்கள் என்று மேற்சொன்ன அறிவிப்புகளில் கூறப்பட்டுள்ளது. எனவே, SARFAESI சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் விதி 3(1)ன்படி அறிவிப்பு வழங்குவதற்காக தற்போதைய வெளியீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| வ. எண் | கணக்கு, கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்) பெயர் மற்றும் முகவரி | செயல்படுத்தப்பட வேண்டிய பத்திரங்களின் விவரங்கள் | கோரிக்கை அறிவிப்பு தேதியன்று பாக்கித் தொகை மற்றும் மேலும் வட்டி, இதர செலவினங்கள் (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | சிவலிங்கம் எம், உஷா எஸ் | மனை எண். 1சி, எண்.397/1 ராகவேந்திரா நகர், பேஸ் - I, புழல், புழல் கிராமம், மாதவரம் தாலுக்கா, சென்னை மாவட்டம், தமிழ்நாடு, 600066ல் உள்ளது. | 1,448,397 |
| 2. | கே ஷியாம் குமார், காயத்ரி கே | மனை எண்.8,எஸ்.எண்.183/12, புதிய டி.எஸ்.எண்.109, பிளாக் எண்.53, வார்டு எண்.ஏ பிளாட் எண். எஸ்1, 2வது தளம், கட்டிடத்தின் பெயர் சாய் கேஸ்டில், பக்தவச்சலம் 2வது குறுக்குத் தெரு ஒரகடம் கிராமம், அம்பத்தூர் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம், சென்னை, தமிழ்நாடு, 600053ல் உள்ளது. | 3,725,314 |
| 3. | முத்துக்குமார் துரைபாபு, லீலா முத்துக்குமார் | பிளாட் எண்.136, ச.எண்.239/4, பட்டாப்படி எண்.7480, மேற்குப் பக்கம், மகாலட்சுமி நகர், நந்தியம்பாக்கம் கிராமம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம், சென்னை, தமிழ்நாடு, 600120ல் உள்ளது. | 998,556 |
| 4. | ஆனந்தராஜ் வி, திவ்யபாரதி ஏ | மனை எண்.5 (மேற்கு பகுதி), புதிய ச.எண்.330/2ஏ1ஏ, MMDA PPD/LO எண்.86/1987, மீஞ்சூர் கிராமம், பொன்னேரி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு, 601203 | 848,535 |
| 5. | தனுஷ்கோட்டி எம், கலைசெல்வி தனுஷ்கோட்டி | கதவு எண்.103, புல்லலூர் ஏ கிராமம், கிராமநத்தம் பழைய எஸ்.எண்46/2 பகுதி, புதிய ச.எண் 811/29, பெருமாள் கோயில் தெரு, காஞ்சிபுரம் தாலுகா & மாவட்டம், காஞ்சிபுரம், தமிழ்நாடு, 631553ல் உள்ளது. | 661,636 |
| 6. | லேட் நாகராஜன் ஏ, சங்கீதா என், மறைந்த ஏ நாகராஜனின் பிற சட்டப் பிரதிநிதிகள் | வீட்டு எண் - புதிய எஸ்.எண். 53/2B 53/4B, மனை எண்.A, ஹரிஷ் அவென்யூ, நாலூர் கிராமம், பொன்னேரி தாலுகா & சார் பதிவு அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம், சென்னை, தமிழ்நாடு, 601203ல் உள்ளது. | 1,423,997 |
| 7. | சுப்ரமணி ஜி, சாந்தி எஸ் | மனை எண்.1 பகுதி பழைய ச.எண்.44/2, 44/3, புதிய ச.எண்.44/2ஏ1டில் உள்ள 894 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நிலம், அங்காளபரமேஸ்வரி நகர், எண்.10, பரிவாக்கம் கிராமம், பூந்தமல்லி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம், தமிழ்நாடு, 600056ல் உள்ளது. | 1,429,477 |
| 8. | ராஜேஷ் போலாட்டி, புஷ்பா போலாட்டி | பிளாட் எண். எப்1, பழைய கதவு எண்.24, புதிய கதவு எண்.4, கருணாநிதி தெரு, சிட்லபாக்கம் கிராமம், தாம்பரம் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 3706 சதுர அடி நிலம். பழைய சர்வே எண்.1/9ஏ11, பட்டா எண்.4137, பட்டாப்படி என்.எஸ்.எண்.1/130, தாம்பரம் சார் பதிவு மாவட்டம், காஞ்சிபுரம், தமிழ்நாடு, 600064ல் உள்ளது. | 3,303,906 |

ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டிற்கு செலுத்த வேண்டிய மேற்கூறிய தொகை மற்றும் வட்டியை இந்த அறிவிப்பை வெளியிட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்த நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில் கடன்தாரர்கள், அடமானதாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்களின் ஈடுபெற்ற சொத்துக்களை சுவாதீனம் எடுத்தல் உள்பட ஏதாவது அல்லது அனைத்து ஈடுபெற்ற சொத்துகளுக்கு எதிராக சட்டத்தின் கீழ் தேவையான நடவடிக்கையை ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட் மேற்கொள்ளும். (1) குத்தகை மூலம் மாற்றுவதற்கான உரிமைகள், ஈடுபெற்ற சொத்துக்களை விடுவிக்க விற்பனை ஒதுக்கீடு உள்பட கடன்தாரர்கள்/உத்தரவாதாரர்களின் ஈடுபெற்ற சொத்துக்களை சுவாதீனம் எடுத்துக் கொள்ளும் உரிமை (2) குத்தகை, ஒதுக்கீடு அல்லது விற்பனை மற்றும் ஈடுபெற்ற சொத்துக்களை விடுவித்தல் மற்றும் உங்களால் மாற்றப்பட்ட ஈடுபெற்ற சொத்துக்கள் தொடர்பான அனைத்து உரிமைகள் கொண்டு ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டினால் ஈடுபெற்ற சொத்துக்களை மாற்றுதல் உள்பட ஈடுபெற்ற சொத்துக்களின் நிர்வாகத்தை எடுத்துக் கொள்ளுதல் போன்றவற்றை உள்ளடக்கி நடவடிக்கை மேற்கொள்ள மேற்சொன்ன சட்டத்தின் கீழ் ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டிற்கு உரிமை உள்ளது.

மேற்சொன்ன சட்டப்பிரிவு 13(13)ன்படி, ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டின் முன் அனுமதியின்றி ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்டில் அடமானம் வைக்கப்பட்டுள்ள மேற்குறிப்பிட்டுள்ள எந்த ஒரு ஈடுபெற்ற ஆஸ்திகளை விற்பனை செய்தல், குத்தகைக்கு விடுதல் அல்லது இதர வகையில் வர்த்தகம் மேற்கொள்வதன் மூலம் (உங்கள் வணிகத்தின் சாதாரண போக்கைத் தவிர) மாற்றல் போன்றவற்றை மேற்கொள்ள உங்களுக்கு இதன் மூலம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

**இடம் : சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர்** **கையொப்பம்: அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
**தேதி : 10.01.2024** **ஹோம் பர்ஸ்ட் பைனான்ஸ் கம்பெனி இந்தியா லிமிடெட்**



**kotak** Kotak Mahindra Bank **கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்** ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

பதிவு அலுவலகம்: 27மKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051 கிளை : 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006. (லேண்ட் மார்க் : சிட்ரான் கார் ஷோரூம் அருகில் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ ரெயில் நிலையம் அடுத்தது)

**அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு**

**பிஎன்பி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்** (இனி "PNBHFL" என்று குறிப்பிடப்படும்) **21.09.2017** அன்று **கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு** ஆதரவாக "PNBHFL" கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், ஈடுபெற்ற கடன் அளித்தவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் (இனி கேஎம்பிஎல் என்று குறிப்பிடப்படும்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டது என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்)க்கு குறிப்பாகவும் இந்த அறிவிப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது. **திரு. பி. பிரகாஷ் அரவிந்த் மற்றும் திருமதி. விஜயலட்சுமி பி** ஆகியோர் ஈடுபெற்ற கடன் அளித்தவர்களான கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு கடன் கணக்கு எண்.HOU/CHE/0916/319678–ன்கீழ் 12.06.2017 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை **ரூ.34,17,746/–(ரூபாய் முப்பத்து நான்கு லட்சத்து பதினேழாயிரத்து எழுநூற்று நாற்பத்தாறு மட்டும்)** மற்றும் 13.06.2017 முதல் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக ஈடுபெற்ற கடன் அளித்தவர்களிடம் உங்களால் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் அவை ‘‘எங்கு எப்படி உள்ளதோ அப்படியே'' என்ற அடிப்படையில் **15.02.2024 அன்று** நண்பகல் 12.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்பில் விற்பனை செய்யப்படும். குறைந்தபட்ச விலை: ரூ.10,00,000/– (ரூபாய் பத்து லட்சம் மட்டும்) முன்வைப்புத் தொகை ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்). கேஒய்சி உடன் முன்வைப்புத் தொகையை சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் 14.02.2024 அன்று மாலை 6.00 மணி (இந்திய நேரப்படி) வரை.

**சொத்து விவரம்:** சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும், காலி மனை, மனை எண்.19, விஸ்தீரணம் 1807 சதுர அடி. சர்வே எண்.230/1 பகுதி, லேஅவுட் பெயர் ‘‘சரஸ்வதி நகர் விரிவு'', பழைய எண்.82, புதிய எண்.111, வரதராஜபுரம் கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ளது. எல்லைகள் : கிழக்கு : காலி மனை, மேற்கு : 20 அடி சாலை, வடக்கு : மனை எண்.20, தெற்கு : மனை எண்.18.

எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி பொது ஏலத்தின் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் **திரு. விஷால் ஆதிசேஷன் (+91 9941016600), திரு. ராஜேந்தர் தஹியா (+91 8448264515)** ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.com அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

**இடம் : சென்னை, தேதி: 10.01.2024** **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்**



**படிவம் எண். INC 25A**

**பிராந்திய இயக்குனர் முன்பாக, தென் பிராந்தியம், கார்ப்பரேட் விவகாரங்கள் துறை அமைச்சகம், சென்னை**

நிறுவனங்கள் சட்டம் 2013, நிறுவனங்கள் சட்டம் 2013–ன் பிரிவு 14 மற்றும் நிறுவனங்கள் (துவக்கம்) விதிகள் 2014, விதி 41 விஷயத்தில் மற்றும்

**ஆர்தோஸ் ப்ரூவரீஸ் லிமிடெட்** விஷயத்தில்

பதிவு அலுவலகம்: எஸ்ஐஎப்சிசி, பேஸ் I, 3வது தளம், ஆயிரம் விளக்கு, 605 & 606, டிஆர் சுந்தரம் அவென்யூ, சென்னை, தமிழ்நாடு – 600 006

29 டிசம்பர், 2023 அன்று நடைபெற்ற அசாதாரண பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்பு தீர்மானத்தின்படி, நிறுவனத்தை பிரைவேட் லிமிடெட் நிறுவனமாக மாற்றுவதற்கான நிறுவனங்கள் சட்டம் 2013, பிரிவு 14 மற்றும் மேற்சொன்ன விதிகளின் கீழ் அத்தகைய மாற்றத்தை மேற்கொள்ள மத்திய அரசுக்கு விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்ய நிறுவனம் திட்டமிட்டுள்ளது என்று பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

நிறுவனத்தின் அந்தஸ்தை மாற்ற/திட்டமிட்டுள்ள மாற்றத்தினால் எவரது நலமேனும் பாதிக்கப்படுவதாக கருதுவாராயின், பாதிக்கப்படும் நலன் மற்றும் எதிர்ப்பதற்கான காரணத்தை பிரமாணப் பத்திரத்துடன் இணைத்து பிராந்திய இயக்குனர், தென் பிராந்தியம், 5வது தளம், சாஸ்திரி பவன், 26, ஹாடோஸ் சாலை, சென்னை 600 006, தமிழ்நாடு, இந்தியா அவர்களுக்கு இந்த அறிவிப்பு வெளியான பதினான்கு நாட்களுக்குள் நேரடியாக அளிக்கலாம் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம். அதன் நகல் ஒன்றை விண்ணப்பதாரர் நிறுவனத்தின் மேற்கண்ட பதிவு அலுவலக முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பதாரர் நிறுவனம் சார்பாக
**ஆர்தோஸ் ப்ரூவரீஸ் லிமிடெட்**
**ஒப்பம்/– திரு. நாகேஷ் தாயி**
DIN : 08455853
**கதவு எண்.11–01–38, 39, டிஎப்4, மானசா ஏ.வி.ஆர். அபார்ட்மெண்ட்ஸ், பிரகாசம் தெரு, ராமாராவ் பேடா, காகிநாடா, ஆந்திரப் பிரதேசம் 533004 இந்தியா**

**தேதி : 08.01.2024**
**இடம் : சென்னை**



**பங்கு சான்றிதழ்கள் காணாமல் போனது பற்றிய அறிவிப்பு**

**(ஐஇபிஎப் ஆணையத்திடமிருந்து உரிமை கோருவதற்கு)**

முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் **(கணக்கு வைப்பு, தணிக்கை, பரிமாற்றம் மற்றும் திரும்ப அளித்தல்)** 2016ன் விதி 8ன்படி இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எங்களின் பெயரில் பதிவு செய்யப்பட் M/s. **சுந்தரம் பாஸ்னர்ஸ் லிமிடெட்டால்** பங்குதாரர் லேட் திரு. லட்சுமிகாந்த் விராஜ்லால் கோசலியா அவர்கள் பெயரில் வழங்கப்பட்ட பின்வரும் பங்கு சான்றிதழ்கள் காணாமல் போய்விட்டது/தொலைந்துவிட்டது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

| போலியோ எண் | பதிவு பெற்ற பெயர் | பங்குகள் | பங்கு சான்றிதழ் எண்(கள்) | குறியீட்டு எண்கள் | |
|---|---|---|---|---|---|
| | | | | முதல் | வரை |
| 1981 | திரு. லட்சுமிகாந்த் விராஜ்லால் கோசலியா | 600 | 412467 | 158784236 | 158784835 |

மேலே குறிப்பிட்டுள்ள பங்குகளுக்கு எந்தவொரு நபரிடமிருந்தும் உரிமை கோரல் இருப்பின், அதற்கான ஆதாரங்களுடன் நிறுவனத்திற்கு அதன் பதிவு அலுவலகம் **சுந்தரம் பாஸ்னர்ஸ் லிமிடெட்,** செயலகத்துறை, 98A, 7வது தளம், டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, மைலாப்பூர், சென்னை – 600 004, மின்னஞ்சல் : **investorshelpdesk@sfl.co.in** அல்லது அதன் பங்கு மாற்று முகவர்கள், இன்டகிரேடட் ரிஜிஸ்ட்ரி மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், ‘‘கென்சஸ் டவர்ஸ்'', 2வது தளம், 1, ராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை – 600 017, மின்னஞ்சல் : **csdstd@integrateindia.in**–க்கு இந்த அறிவிப்பு வெளியான 15 நாட்களுக்குள் எந்தவொரு ஆட்சேபனையும் வராதபட்சத்தில் பதிவுசெய்த உரிமையாளருக்கு ஆதரவாக நிறுவனம் தீர்வு காணும் நடவடிக்கை மேற்கொள்ளும். அதன்பிறகு எந்தவொரு கோரிக்கையையும் நிறுவனம் பெறாது. மேலே கூறப்பட்ட பங்குகளில் வர்த்தகத்தை எவரேனும் மேற்கொண்டால் அதற்கு அவரே பொறுப்பாவார்.

**இடம் : சென்னை**
**தேதி : 10.01.2024** **திரு. ஜெயேஷ் லட்சுமிகாந்த் கோசலியா**



**BEFORE THE V ASST, CITY CIVIL COURT AT MADRAS**
**O.S.No.6302 of 2018**

Union Bank of India,
(erstwhile Corporation Bank),
Represented by its Branch Manager, Plaintiff
VS
M/s. Maa Poo women Self Help Groups and 20 others
Defendants

To
1. S.Kokila, D/o. Sriramulu, (D-5)
No.40, Pillaiyarkoil Street, Guindy, Chennai -32.
2. S.Selvi, W/o. Sriramalu, (D-6)
No.72, Pillaiyarkoil Street, Guindy, Chennai - 32.
3. S.Soundari, W/o.Sambathkumar, (D-7)
No.13, Pillaiyarkoil Street, Guindy, Chennai - 32
4. V.Dhanalakshmi, W/o. Varadhan, (D-8)
No.24, Pillaiyarkoil Street, Guindy, Chennai - 32.
5. Malliga, W/o.Rajendran, (D-9)
No.24, gandhiyar Street, Nehru Nagar, Chennai – 32.
6. S.Mala, W/o.V.Srinivasan,(D-11)
No.12, Pillaiyarkoil Street, Guindy, Chennai – 32.
7. J.Vatchala, W/o. Jaganadhan (D-12)
No.29/15, Pillaiyar koil Street, Guindy, Chennai- 32.
8. S.Sindhuja, W/o.Saravanan, (D-13)
No.36/74, Pillaiyar koil Street, Guindy, Chennai – 32.
9. K.Amul, W/o.Kabali, (D-17)
No.45, Pillaiyar koil Street,Guindy, Chennai – 32.
10. M.Devi, W/o.Munisami, (D-18)
No.36/74, Pillaiyar koil Street, Guindy, Chennai – 32.
11. R.Santhiya, W/o. T.Ramasandiran (D-19)
No.80, Pillaiyar koil Street, Guindy, Chennai – 32.
12. D.Selvi, W/o. Dhayalan, (D-20)
No.81, Pillaiyar koil Street, Guindy, Chennai – 32.
13.K.Suganthi, W/o.Karthick (D-21)
No.11, Mosque Colony, 1st Street, Guindy Chennai – 32.

The above Original Suit No.6302 of 2018 has been filed by my Client Union Bank of India (erstwhile Corporation Bank) against you for Recovery of dues, before the Hon'ble V Assistant City Civil Court, Chennai. The above matter came up for hearing on 08.01.2024. The Hon'ble V Asst. City Civil Court, Judge has ordered notice to all of you through the paper publication and returnable by 20.02.2024.

Take Notice and be present before the Hon'ble V Asst. City Civil Court, Chennai on 20.02.2024 at 10.30 am either in person or through your Pleader, failing which the above matter shall be heard and decided in your absence.

A.Jaishankar,
Advocates,
No.215, New Additional Law Chamber,
High Court, Chennai -104